குருணாகல் மாநகர சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

குருணாகல் மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க குருணாகல் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள்

தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 575,884 முத்திரைக் கட்டணம் நானாவித வைப்பின்கீழ் காண்பிக்கப் பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	ஆண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டண செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணக் கணக்கிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.	முன்னைய ஆண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டண செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் நடப்பாண்டின் கணக்காய்வுக் கட்டண செலவினத்திற்குரிய பட்டியல் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கிடைக்கப் பெறாதிருந்த மையால் அந்த செலவினம் அட்டுறுவாக காண்பிக்கப்படவில்லை.	அட்டுறு செலவினத்தின் கீழ் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ள மையால் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கம் மேற்கொண்டு கணக்கு வைத்தல் வேண்டும்.
(இ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சிய இருப்பில் ரூபா 951,862 பெறுமதியான நிலையான சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	களஞ்சிய இருப்பை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	பெறுமதி ரூபா 138,069,759 ஆன சொத்துக்களின் இருப்பினை இனங்காணாமல் நடைமுறையல் லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	அந்த மீதிகள் 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களாக இருந்தமையால் எதிர்காலத்தில் குழுவொன்றை நியமித்து அந்த சொந்துக்கள் மற்றும் பதிவேடுகளை பரீட்சித்து அந்த மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(உ)	2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 130,167,441 ஆன 10 வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப் படாதிருக்கும் போது கட்டிடம் மற்றும் பொருத்திகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.	பூர்த்திசெய்யப்படாத செயற்திட்டங்க ளுக்குரிய மூலதனமாக்கப்பட்ட பெறுமதி நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேலைக் கடன் கொடுத்தோர் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளபடியாக கொள்வனவு செய்யப்படாத ரூபா 2,484,362 ஆன தளபாடங்களும் பொருத்தி களும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கொள்வனவு செய்யப்படாத பொமறுதி நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டின் போது உள்ளபடியாக கொள்வனவு செய்யப்படாத ரூபா 1,500,000 ஆன சிகிச்சை உபகரணங்கள் ஆயுர்வேத மற்றும் கருவிகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.	நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டின் இறுதியில் எந்தவொரு உடன்படிக்கையின் கடப்பாடுகளும் இன்றி வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 134,147,488 செலவினம் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இனங்காணப்பட்ட செலவினங்களை செய்யும் வகையில் திணைக்களமயப் படுத்தப்பட்ட திணைக்களத் திற்குரிய தேவைகள் மற்றும் கோரிக்கைகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஐ)	மீளாய்வாண்டின் மாகாண பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட இரண்டு செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,981,500 கிடைக்க வேண்டிய மூலதன உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஒ)	முன்னைய ஆண்டுகளில் அமுல் படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 1,044,080 பெற வேண்டிய மூலன மாணியக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஓ)	குருணாகல் பொது நூலகத்திற்கு 2023/2024 ஆண்டுகளில்	நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

	நன்கொடையாகக் கிடைத்த ரூபா 138,045 ஆன புத்தகங்கள், நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	எடுக்கப்படும்.	
(ஔ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 50,479,357 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 52,687,702 ஆக ரூபா 2,208,345 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கணக்குகளைப் பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(க)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் இலங்கை வங்கி கடன் கணக்கின் மீதி ரூபா 900,740,034 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 933,639,844 ஆக ரூபா 32,899,810 அதிகரித்து கணக்கீடு செய்யப் பட்டிருந்தது.	வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் மீதிகளை சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(கா)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் குத்தகை கடன் மற்றும் வட்டி ரூபா 138,005 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 897,639 ஆக ரூபா 759,634 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பரீட்சித்து சரிசெய்யப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(கி)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு MC Plaza சோலா முறைமையில் திசம்பர் மாத்திற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 469,986 வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(கீ)	மத்திய சந்தையை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்த கடனுக்காக மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணம் மற்றும் வட்டிக்காக ரூபா 11,698,149 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 390,274,899 ஆண்டில் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்கான ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நிலுவைக் கடன் தொகையின் மீதி பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி தொடர்பாக சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(கு)	புதிய மத்திய சந்தை செயற்திட்டத்திற்காக கிடைக்க வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் (key money) மதிப்பீட்டு வருமானம் ரூபா 1,197,662,247 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 680,960,217 வருமானமாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் 2021 முதல் 2024 வரையான காலத்தில் வருமானமாக ரூபா 1,417,137,000 கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 736,179,783 இனால் மூலதன வருமானம் அதிகரித்திருந்தது.	புதிய மதிப்பீட்டை உள்ளடக்கி பட்டோலைகள் மற்றும் கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(கூ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையில் புதிய மத்திய சந்தை செயற்திட்டத் திற்காக கிடைக்க வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் (key money) பெறுமதியில் கேள்வி பெறப்படாதிருந்த 58 கடைகளில் ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் (key money) பெறுமதி ரூபா 516,702,030 உள்ளடக்கப் பட்டதன் காரணமாக நிலுவையாக இருந்த மூலதன வருமானம் அப்பெறுமானத் தால் அதிகரித்திருந்தது.	இந்தத் தொகை விற்பனைச் செய்வதற்கு காணப்படுகின்ற பங்குகளுக்கு உரிய எதிர்பார்க்கப் பட்ட வருமானமாக இருந்ததுடன் அதனை சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(கெ)	புதிய மத்திய சந்தை வீடமைப்புத் தொகுதியில் மதிப்பீட்டு வருமானம் ரூபா 682,500,000 தொகை 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வருமானமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வீடுகள் கேள்வி கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிலுவையாக இருந்த மூலதன வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்பாராத சமூக பொருளாதார காரணங்களின் அடிப்படையில் விற்பனை நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் போது விற்பனை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(கே)	ஓய்வூதிய திணைக்களத்திற்கு 2024 யூன் முதல் திசம்பர் வரை செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்புப் பணம் ரூபா 607,948 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(கை)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக 62 மோட்டார் வாகனங்களின் பெறுமதி	பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

	ரூபா 40,835,000 குறைத்தும், 17 மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 5,750,000 அதிகரித்தும் காண் பிக்கப்பட்டிருந்தது.		
(கொ)	04 வாகனங்களின் பெறுமதி ரூபா 83,000,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(கோ)	கட்டிடப் பொருத்திகள் மற்றும் கணனி மற்றும் துணைப் பாகங்களின் பெறுமதி கணக்கீடு செய்யும் போது 2020 முதல் 2024 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டி ருந்ததுடன் மாநகர சபைக்குச் சொந்தமான 2020 இற்கு முன் நிர்மாணிக்கப்பட்ட 204 கட்டிடங்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட கணனி மற்றும் துணைப் பாகங்களின் பெறுமதி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(கௌ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளாவறு மல்கடுவாவ சுடலைக் கூடத்தில் காணப்பட்ட ரூபா 275,286 ஆன எரிவாயு இருப்பு மற்றும் சுந்தராப்பொல கழிவுப்பொருள் தளத்தில் காணப்பட்ட ரூபா 2,916,422 ஆன உர உறைகள் மற்றும் சேதனப் பசளை இருப்புக்கள் இருப்பாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 இன் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ச)	மீளாய்வான்டின் கட்டட நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 3,391,499 தொகை நடை முறையல்லாச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(சா)	செல்லப் பிராணிகளுக்காக சுடலைக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் கடன்கொடுத்தோராக ரூபா 1,100,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த செயற்திட்டம் நிறை வேற்றப்படாமல் கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கட்டிடங்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(சி)	நகர சபையின் தேசிய அபிவிருத்தி நிதியத்தில் இருந்தும் இலங்கை வங்கியிலிருந்தும் பெறப்பட் டிருந்த நீண்டகாலக் கடன் மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய கடன் மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(சீ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி ரூபா 788,547,073 ஆக இருந்த போதும் அது ரூபா 789,238,643 ஆக ரூபா 691,570 அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் மீதியை சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(சு)	மீளாண்வாண்டில் நிலையான வட்டி வைப்பு வருமானம் ரூபா 4,062,977 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 4,943,097 ஆக ரூபா 880,120 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொறியியல் பிரிவில் வேலைப் பெறுமதியின் பிரகாரம் மத்திய சந்தை, சிகிச்சை நிலையம் மற்றும் முன்பள்ளி பாடசாலைக் கட்டடத்தின் நிர்மாண கிரயம் நிதிக்கூற்றுக்களில் மூலதன மாக்கப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே ரூபா 1,100,601,691 வேறுபாடு காணப்பட்டது.	பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லா சொத்துக்களின் மீதிக்கும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 19,683,603 வேறுபாடு காணப்பட்டது.	பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 27 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும், பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்குமிடையே ரூபா 276,205,687 வேறுபாடு காணப்பட்டது.	பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்காக தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பட்டோலை மற்றும் மீதி உறுதிப்படுத்தல் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 930,106,447 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ/ உறுதிப்படுத்தவோ முடியாதிருந்தது.	09 கணக்கு விடயங்களுக்குரிய பட்டோலைகள் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் 27ஆம் பிரிவு	கையளித்தல் கட்டளையின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட காணியொன்றின் மூல உரித்து அரசாங்கத்திற்கு சொந்தமாக இருந்ததுடன் சானாதிபதி அவர்களின் முன் அங்கீகாரம் இன்றி மூன்றாவது தரப்பினருக்கு விடுவிப்பதற்கு அந்த உள்ளூராட்சி நிறுவனத்திற்கு உரித்தில்லாதிருந்த போதும் TPS பக்க இலக்கம் 1/50/14 இன் 95 என்ற காணி அதாவது வைத்தியசாலைக்கு முன்னுள்ள காணி GC – 54 – 2019 – 02.12 என்ற பொதுச் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் 2020 மே 19 ஆம் திகதி முதல் 2035 மே 18 ஆம் திகதி வரையான காலத்திற்கு நீண்டகால வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.	கையளித்தல் கட்டளை கிடைத்த பின்னர் அதி மேதகு சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்திற் காக எதிர்காலத்தில் அனுப்பும் எதிர்பார்ப்பை இந்த ஆதனங்கள் விளைவற்ற சொத்தாக இருப்பதை தடுத்து வருமானம் உழைக்கும் வகையிலும், மாநகர சபைக்கு வருமானம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திலும் முன்னால் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருந்தது.	மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
(i)	நிதிப் பிரமாணம் 751	உடற்பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற ரூபா 8,152,527 ஆன உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் மரணச் சாலைகளுக்கு சொந்தமாகக் காணப்படுகின்ற பொருட்கள் பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காணப்படுகின்ற சகல பொருட்களும் பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப் பிரமாணம் 756	2024 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மை ஆய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	நிதிப் பிரமாணம் 1645(ஆ)	தமது பொறுப்பிலுள்ள ஒவ்வொரு வாகனத்திற்காகவும் தமது அலுவலகத்தில் 267 ஆவது பொது மாதிரிப் படிவத்தின் பிரகாரம் வாகன சம்பவத்திரட்டு புத்தகம் வைக்கப்பட்டு நாள்தோறும் அதில் எழுத வேண்டிய சகல விடயங்களும் எழுத வேண்டியிருந்த போதிலும் உரிய பொறுப்புக்களில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது சகல வாகனங் களுக்காகவும் சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் வைத்து நாளதுவரையாக்கப்படுகின்றது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	அரச நிருவாக சுற்றறிக்கை			
(i)	2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை	நகர சபைக்குச் சொந்தமான 94 வாகனங்கள் நிறுவனத்தின் பெயர் அடையாளம் இடப் பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தில் தமது அடையாளம் இடப்படாத சகல வாகனங்களிலும் பெயர் அடையாளம் இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	2016 திசம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 3(1) ஆம் பந்தி	மாநகர சபைக்குரிய 34 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எரிபொருள் எரிவுப் பரிசோதனை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை			
(i)	1984 நவம்பர் 20 ஆம் திகதிய இலக்கம் 1984/19 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தி	ஊக்குவிப்புப் படி செலுத்தும் போது ஒவ்வொரு மாதத்தின் போதும் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் அவர்களின் மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தை விஞ்ச முடியாதிருந்த போதிலும் 2022 முதல் 2024 செப்டெம்பர் வரை ஆதனவரி பிரிவில் 14 வருமானப் பரிசோதகர்களுக்காக 117 சந்தர்ப்பங்களின் போது மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தை விஞ்சி ஊக்குவிப்புப்படி செலுத்தப் பட்டிருந்தது.	காணப்படுகின்ற ஆதன வரி நிலுவையை குறைத்துக் கொள்ளும் உபாயத் திட்டமாக 2020 பெப்ரவரி 13 ஆம் திகதிய GC – 06(06) என்ற பொதுச் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் உரிமையாளர்கள் ஆதனவரி செலுத்தாமையின் அடிப்படையில் ஒன்று சேர்க்கப்பட்டிருந்த தண்டப்பண தொகையில் ஒரு பகுதி களப் பதவியணியினர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர் களுக்கிடையே சபை அங்கீகாரத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	1980 திசம்பர் 31 ஆம் திகதிய இலக்க 1980/46 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி	வாடகையாளர்களால் தமக்கு கடைகள் உப வாடகைக்கு வழங்குதல் முழுமையாக தடைசெய்யப் படுவதுடன் அவ்வாறான சந்தர்ப்பத்தின் போது வாடகையாளர்களின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்ய வேண்டுமென காண்பிக்கப்பட்ட போதும் புதிய மத்திய சந்தையில் கட்டம் III கடைகளை நிர்மாணிக்கும் போது உடைத்து அகற்றப்பட்ட கடைகளுக்காக வழங்கப்பட்டிருந்த தற்காலிக கடைகள் உரிமையாளர்காளல் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.	உப வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளைப் பரீட்சித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 150,019,410 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 144,435,202 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 7,545,153 ஆன வங்கிக் கணக்கிற்குரிய மீதிக்காக வங்கி உறுதிப்படுத்தல் கடிதம் பெறப்பட்டிருக்க வில்லை.	வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மீதி உறுதிப்படுத்தல் கடிதம் பெற்று சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2.31 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000
i.	ஆதன வரியும் வரியும்	482,370	723,357	654,686	402,829	494,500	511,538	443,758	334,158
ii.	வாடகை	215,004	100,777	100,426	10,798	116,375	101,548	105,585	10,441
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	38,376	29,156	26,156	-	16,402	29,439	29,439	-
iv.	ஏனைய வருமானம்	38,376	154,223	156,676	119,118	655,365	491,596	501,211	121,571
	மொத்தம்	774,126	1,007,513	937,944	532,745	1,282,642	1,134,121	1,079,993	466,170

2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 1,007.51 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமான பெறுவனவையும் உள்ளடக்கி ரூபா 937.94 மில்லியன்	நிலுவை பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

	மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் நிலுவை வருமானத்துடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 532.74 மில்லியன் மேலும் அறவிட வேண்டி காணப்பட்டது.		வேண்டும்.
(ஆ)	**வீத வரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட ஆதனவரி நிலுவை ரூபா 334.16 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 134.75 மில்லியன் மீளாய்வாண்டில் கிடைத்திருந்தது. 2024 ஆம் ஆண்டிற்குரிய சிட்டையிடல் ரூபா 723.36 மில்லியன் தொகையில் ரூபா 519.93 மில்லியன் கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ஆதனவரி மீதி ரூபா 402.83 மில்லியனாகக் காணப்பட்டது.	நிலுவை பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை வருமானம் மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானம் என்பவற்றை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	குருணாகல் குளத்தை அண்மித்த பகுதியில் பொழுதுபோக்கு சேவை நடாத்துவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2020 சனவரி 01 ஆம் திகதி முதல் 2034 திசம்பர் 31 வரை 15 வருட காலத்திற்காக நீண்ட கால வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் வாடகையாளர் மாதாந்த கட்டணம் செலுத்துதல் புறக்கணித்திருந்ததுடன் அது தொடர்பாக சபை இணங்கியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் 2020 ஆம் ஆண்டில் ரூபா 1,042,000 வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	கொரோனா நிலைமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டிற்கான கட்டணம் அறவிடாதிருந்ததுடன் 2021 சனவரி முதல் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டணம் அறவிடுதல் பொருத்தமானது எனவும் 2021 ஏப்ரல் 08 ஆம் திகதிய GC/6/15/2021/04/08/A/C1 என்ற பொதுச் சபை அங்கீகரித்திருந்தது.	உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**வாடகை**		
	வாடகைக்கு வழங்கப்பட்ட புதிய மத்திய சந்தை கடைகள் 66 இல் மீளாய்வாண்டில் இறுதி வரையில் ரூபா 135,814,922 ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் (Key Money) அறவிட வேண்டியிருந்தது.	வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளில் நிலுவையாக இருந்த ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் (Key Money) தவணையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை ஒரே தடவையில் அறவிடப்படும் தொகை (Key Money) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	**அனுமதிப் பத்திரக் கட்டணம்**		
	சபை அதிகாரப் பிரதேசத்தில் வட்டார பிரிவு இலக்கம் 03, 05 மற்றும் 06 இற்குரிய அறிவித்தல் பதாதைகள் மூலம் வருடாந்தம் அறவிட வேண்டிய ரூபா 7,805,748 அறவிடப்பட்டிருக்கவில்லை.	கட்டணம் செலுத்தாதுள்ள பதாதைகளுக்காக இறுதி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது.	கட்டணம் செலுத்தாதுள்ள பதாதைகளுக்கான பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.3.3 மிகைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக மீளாய்வாண்டின் போது ரூபா 710,669 மிகைக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது.	மிகைக் கட்டண சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட பின்னர் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	மிகைக் கட்டண சான்றிதழ் எதிர்காலத்தில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 07 கணக்குகளில் காணப்பட்ட ரூபா 464,596,379 மீதியில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 46,770,750 காணப்பட்டது. இந்த மீதியினை அறவிடுவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.	முன்னைய ஆண்டுகளில் இருந்து கொண்டுவரப்படுகின்ற மீதிகள் ஒன்றுசேர்கின்றமை யினால் பரீட்சித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 16 கணக்குகளில் காணப்பட்ட ரூபா 2,339,604,722 மீதியில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 77,902,440 ஆகும். மீதிகளின் இருப்பைக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பைக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நைட் பசார் (Night Bazar) சந்தை செயற்திட்டத்தை தொடர்ச்சியாக பேணிச்செல்லும் நோக்கில் சந்தை நடாத்தப்பட்ட வளவில் மின்சார வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 94,205 மற்றும் கழிவு நீர் இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 173,892 கிரயம் செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த சந்தை தற்போது செயற்படாதிருந் தமையினால் செலவிடப்பட்ட கிரயம் சிக்கனமற்றதாக இருந்தது.	செயற்திட்டத்தை அமுல்படுத்தி பேணிச்செல்லும் போது காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக தற்காலிகமாக இந்த செயற் திட்டத்தை நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.	முறையான சாத்தியவள ஆய்வின் மூலம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் தீர்த்து வைக்கப்படாத சம்பள முற்பணத்தில் ரூபா 1,330,170 இனங்காணப்படாத நிதியொன்று காணப்பட்டது.	கணக்குகளைப் பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன் மீதிகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மலம் அகற்றும் முறைமையிலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை மீதி ரூபா 168,188,180 ஆகும்.	மாற்று உபாய வழிகளின் மூலம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீர்க் கட்டண நிலுவை மீதி ரூபா 139,775,763 ஆகும்.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இறுதிச்சடங்கு மண்டபம் அமைந்துள்ள காணியின் தனியார் வியாபாரியினால் நடாத்திச் செல்லப்படு கின்ற சிற்றுண்டிச்சாலை, கொட்டகை மற்றும் நெஸ்கெபே சேவைகளுக்காக மாநகர சபையின் அங்கீகாரம் அல்லது கேள்வியின்றி நிலம் பயன்படுத்தப்பட்டிருந்தது.	குருணாகல் மாநகர சபைக்குரிய இறுதிச்சடங்கு மண்டபங்களில் கட்டணம் அறவிடப்படுவதுடன் அதன் போது உணவுப் பானங்கள் வழங்குதல் நகர சபையினால் வழங்கப்படுவதில்லை.	சபையின் ஆதனங்களைப் பயன்படுத்தி தனியார் வியாபாரியினால் வியாபாரங்கள் மேற்கொள்வதைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	மாநகர சபையினால் இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட ரூபா 700,000,000 கடன் தொகைக்கு வட்டி செலுத்தப்படுவதுடன் 2025 ஆகஸ்ட் 08 ஆந் திகதிக்கு முன்னர் உரிய கடன் தொகை முழுமையாக செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு கடன் தொகைப் பணமும் செலுத்துவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணக்காய்வினால் சுட்டிக்காட் டப்பட்டுள்ள ரூபா 700 மில்லியன் கடன் தொகையை செலுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்காமையின் அடிப்படையில் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் கடன் தவணைப் பணம் செலுத்தாதிருந்ததுடன் அதற்காக எதிர்காலத்தில் கடனை செலுத்துவதற்கு சலுகைக் காலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இணங்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	வெளிநாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியம் மூலம் 2021 மார்ச் 23 ஆந் திகதி ரூபா 800 மில்லியன் கடன் தொகை பெறப்பட்டிருந்ததுடன் அந்த கடன் தொகையில் ரூபா 400 மில்லியன் தொகை 2025 மார்ச் 23 ஆம் திகதி வரையில் எஞ்சியிருந்தது. இந்த தொதை 2026 மார்ச் 23 ஆம் திகதி வரையில் செலுத்தி பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது.	மத்திய சந்தை செயற்திட்டத் தின் மிகுதி வியாபார பகுதிகள் விற்பனை செய்து கடன் தொகை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இணங்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	நகர சபைக்குச் சொந்தமான ரன்தெளிய வாடகை வீட்டின் நிர்வாக நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டி ருந்த போதிலும் இரு தரப்பினருக்குமிடையே ஏற்பட்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	கோவையின் பிரகாரம் நகர சபை மற்றும் ரன்தளிய விருந்தினர் வீட்டுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை காணப்படவில்லை.	இணங்கப்பட்ட உடன்படிக்கையின் கீழ் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	நீண்டகால ரீதியில் வாடகைக்கு வழங்கப்பட்ட ஆதனத்தின் வாடகைத் தொகை 05 வருடங்களுடக்கு ஒரு தடவையேனும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட ரன்தெளிய வாடகை வாடி வீட்டின் வாடகைப் பணத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஒரே தொகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.	கோவையின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வாடகைப் பணத்தை திருத்துதல் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	இணங்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	மத்திய சந்தை நிர்மாணம் கட்டம் III இன் கீழ் 99 கடைகள் நிர்மாணித்து வாடகைக்கு வழங்குதல் தொடர்பான பரீட்சித்தல்.		
(i)	இலக்கம் GC/06/08/2021/02/10/AR/03 என்ற பொதுச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ஒரே தடவையில் செலுத்தும் தொகையில் 2/3 பெறுமதியில் 05 தவணைகளில் செலுத்துவதற்கு கொடுப்பனவுகள் தாமதிக்கின்ற கேள்விதார்களிடமிருந்து 10 சதவீத தண்டப் பணம் அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 யூலை 05 ஆம் திகதி வரையில் ஒரே தடவையில் செலுத்துகின்ற பணம் குறித்துரைத்த பிரகாரம் அறவிடாமையின் காரணமாக ரூபா 2,823,623 தண்டப்பணத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்தக் கடைகள் தொடர்பாக வழக்கு நடவடிக்கைகள் காணப்படுகின்றமையினால் நிதியை அறவிடல், கடைகளின் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பித்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளது.	தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	கடைகள் தொடர்பாக இலக்கம் SC/FR/212/2021 என்ற வழக்கு செயற்பாட்டில் காணப்படுகின்றமை யினால் 2023 சனவரி 04 ஆம் திகதி அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் கடைகளுக்காக வழங்கப்பட்டிருந்த மாதாந்த கடை வாடகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தமையால் சபைக்கு இழக்கப்பட்டிருந்த கடை வாடகை வருமானம் ரூபா 13,896,000 ஆகும்.	கடைகள் தொடர்பாக வழக்கொன்று அமுலில் உள்ளது.	கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
(எ)	பொதுச் சந்தை வளவில் வாகனத் தரிப்பிடத்தில் புதன், சனி மற்றும் ஞாயிறு என்ற தினங்களில் மாத்திரம் கட்டணம் அறவிடப்படுவதுடன் ஏனைய நாட்களில் மூடப்படுகின்றமையினால் நிலம் விளைவற்றுக் காணப்பட்டமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய கணிசமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	சந்தை வளவில் பரப்பளவில் பெரியதாக இருந்த போதிலும் சந்தை நடைபெறாத தினங்களில் இந்த இடத்தில் கேள்வி குறைவாகும்.	சபை ஆதனங்களிலிருந்து உச்ச அளவில் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஏ)	நகர சபை எல்லையில் மோட்டார் வாகனங்களை நிறுத்தும் 15 இடங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த இடங்கள் தொடர்பாக நகர சபையின் மேற்பார்வை இழிவான நிலையில் காணப்பட்டமையால் நாளாந்தம் பெறக்கூடியதாக இருந்த கணிசமான வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	தற்போது இந்த வாகனத் தரிப்பிடங்கள் கேள்வி கோருவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.	வருமான வழிகளை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	சபை பயன்படுத்துகின்ற 92 காணிகளில் 62 காணிகளின் உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு மாநகர சபைக்குச் சொந்தமான 08 மில்லியன் பெறுமதியான ஒரு காணி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	மதிப்பீடு செய்வதற்கும் உரித்தை தீர்த்து வைத்து கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக்குதல் வேண்டும்.
(ஒ)	வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள மலசல கூடக் காணியில் வாடகை தொடர்பாக நகராதிபதி மற்றும் நகர ஆணையாளரின் எழுத்து மூல கட்டளையின் பிரகாரம் வருமானப் பரிசோதகரால் மாதாந்தம் ரூபா 25,000 தற்காலிக மதிப்பீட்டில் நில வாடகை ஒன்று அறவிடப்பட் டிருந்தது. 2023 யூலை 06 ஆம் திகதி அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் ரூபா 1,137,600 வருடாந்த வாடகையாக அறவிட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட் டிருந்த போதிலும் அந்த மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.	2025 மே 28 ஆந் திகதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்திருந்ததுடன் அதன் பிரகாரம் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	மதிப்பீட்டு அறிக்கைக்குரிய பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஓ)	குருணாகல் கொழும்பு வீதியில் இலக்கம் 191/12/B என்ற இடத்தில் வியாபார கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு நகர ஆணையாளரால் 2023 செப்டெம்பர் 21 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த இலக்கம் BA/66/2022 என்ற தரச்சான்றிதழின் நிபந்தனையை மீறி அனுமதியற்ற நிர்மாணமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.	முறையான அங்கீகாரத்தைப் பெறுமாறு 2025 மே 27 ஆந் திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.	அனுமதியற்ற நிர்மாணங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1992 பெப்ரவரி 26 ஆம் திகதிய இலக்கம் 05/01/119 என்ற நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு முரணாக திட்டமிடல் குழு அலுவலக நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டு அலுவலக நேரத்தின் பின்னர் இரண்டு மணித்தியால காலத்தை மேவுகை செய்யாமல் படியாக ரூபா 166,000 வழங்கப்பட்டிருந்தது.	உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் படிகளை செலுத்து வதற்கும், இதன் பின்னர் செலுத்தப்பட்ட சிலவற்றைப் பரீட்சித்து மீள அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	திட்டமிடல் குழுவிற்காக 2024 சனவரி முதல் செப்டெம்பர் வரையான காலத்தில் நகர சபைக்காக பிரதிநிதித்துவப்படுத்திய 07 உத்தியோகத்தர்களுக்கு 123 சந்தர்ப்பங்களின் போது விடுமுறை வழங்கப்பட்டிருக்கும் போது (கைவிரல் அடையாள பிரதியின் பிரகாரம் வருகை மற்றும் வெளிச்செல்கை இன்றி) திட்டமிடல் குழுவிற்கு பங்குபற்றியதாக கையொப்பம் இட்டு படியாக ரூபா 248,000 வழங்கப்பட்டிருந்தது.	பரீட்சித்து பதிலளிக்கப்படும்.	விடுமுறை தின படிகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள தொகையினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைச் சட்டத்தின் 188 ஆம் பிரிவு மற்றும் 1984 நவம்பர் 20 ஆம் திகதிய இலக்கம் 1984/19 என்ற உள்ளூராட்சி அணையாளரின் சுற்றறிக்கை 4.2 ஆம் பந்திக்கு முரணாக 2020 முதல் 2024 செப்டெம்பர் வரையான காலத்தில் நிலுவை ஆதனவரிகளுக்குரிய பிடியாணை தொகையில் தரகாக ரூபா 17,331,751 செலுத்தப்பட்டிருந்தது.	செலுத்தப்படாத நிலுவை ஆதனவரிகளை அறவிடுவதற்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் சபையின் வருமானத்திற்கு நேரடியாக பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.	மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2016 ஆம் ஆண்டு முதல் மாநகர சபையினால் அவ் வப்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,357,688 பெறுமதியான 29 விடயங்கள் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் பெறுமதி ரூபா 1,741,913 ஆன 14 விடயங்கள் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் பரிமாற்றிக் கொள்ளல் மற்றும் பிரதேசத்தில் இனங்காணப் பட்டுள்ள நிலையங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது தேவையின் பிரகாரமும், பெறுகை திட்டத்தின் பிரகாரமும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்கு உரித்தான காணியொன்றில் பேணிச் செல்லப்பட்ட தனியார் பேரூந்து நிலையத்தை அகற்றுவதற்கு மீளாய்வாண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிர்மாண கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	உள்பத்தேவத்த காணி குருணாகல் மாநகர சபைக்கு கையளிக்குமாறும் கோரி பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	சபைக்கு காணியைக் கையேற்று அனுமதியற்ற நிர்மாணத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	குருணாகல் போதனா வைத்தியசாலைக்கு முன்னால் பொது மலசல கூடத்திற்காக ஒதுக்கப்பட்ட 4.74 பேர்ச் காணி அரசாங்கத்தின் காணியொன்றாக இருந்த போதும் அதனை சபைக்கு	மாநகர சபைக்கு கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	சபைக்கு கையேற்றல் வேண்டும்.

	கையேற்காதிருந்ததுடன் இதில் 03 மாடிகளை உடைய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.		
(இ)	வில்கொட அறுவைக்கூட காணி கணக்காய்வுத் திகதி வரையிலும் மாநகர சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	மாநகர சபைக்கு கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	சபைக்கு கையேற்றல் வேண்டும்.

3.6 ஒப்பந்த நிர்வாகம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	குருணாகல் குளம் நிலக் குறிகாட்டி செயற்திட்டம் III ஆன கட்டத்தில் ஒப்பந்தகாலம் 2023 திசம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த போதும் 2024 யூலை வரையிலும் பெறுமதி ரூபா 1,377,750 ஆன சிறு கொங்ககிறீட் கல் பதித்தல், கன்றுகள் நடல் மற்றும் புற்புடி பிடித்தல் போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	தற்போது ஊழியர் பங்களிப்பை வழங்கிய பொறியியல் சேவை படையணியின் உத்தியோகத்தர்களின் காலம் முடிவடைந்துள்ளமையால் அகற்றப்பட்டுள்ளதுடன் சிறு கற்கல் கிடைத்தவுடன் மீண்டும் வேலைகளை பூர்த்திசெய்ய முடியும்.	உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பொல்அத்தாப்பிட்டி பழைய சனசமூக மண்டபத்தை நவீனமயப்படுத்துவதற்கு உரிய உடன்படிக்கை செய்யப்பட்ட மதிப்பீட்டில் 27 சதவீதத்திற்கு அண்ணளவான பெறுமதி ரூபா 1,091,019 ஆன வேலைகள் முழுமையாக ஒப்பந்தகாரருக்கு நிறைவேற்றாமல் கைவிட்டிருந்தால்.	இலக்கம் 09 இன் கீழ் உள்ள விடயத்திற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அந்த வேலைப் பகுதி நகர சபையின் நேரடி தொழிலாளர் ஊழியத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது.	மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	குருணாகல் பிரதான பேரூந்து நிலையத்தில் பொது மக்களுக்கு நுழைவதற்கும் பொது மக்கள் இருக்கக்கூடிய இடமொன்றில் இடையூறாக இருந்தமை மற்றும் பேரூந்து சரியான முறையில் செல்வதற்குள்ள இடத்தில் மாநகர சபை நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 2021 சனவரி 06 ஆம் திகதி ரூபா 4,819,537 தொகையில் கடைகள் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரக் கம்பனிகளுடன் உடன்படிக்கை செய்து 2022 மே 26 ஆம் திகதி ரூபா 1,445,847 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2022 யூலை 12 ஆம் திகதிய இலக்கம் NWP/GOV/AD/02/16/13 என்ற வடமேல் மாகாண ஆளுநரின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் இந்த நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்த போதிலும் இந்த நிர்மாணத்திற்காக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட ரூபா 1,445,847 முற்பணத் தொகை மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	முற்பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	செலுத்தப்பட்ட முற்பணத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	சிகிச்சை நிலையம் மற்றும் முன்பள்ளி பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்குரியதாக வழங்கப்பட்ட முற்பணத் தொகையை அறவிடலின் பரீட்சிப்பு		
(i)	ஒப்பந்த உடன்படிக்கையில், ஒப்பந்த நிபந்தனையில் (Conditions of Contract) இலக்கம் 14.2 இன் பிரகாரம் முற்பணத் தொகை செலுத்தும் போது Provisional sums குறைக்கப்பட்டு மிகுதி ஒப்பந்தத் தொகையில் 20 சதவீதம் செலுத்த முடியுமாக இருந்த போதும் நகர சபையால் மொத்த ஒப்பந்த தொகையையும் அடிப்படையாகக் கொண்டு ரூபா 46,424,517 செலுத்தப்பட்டதன் காரணமாக நிபந்தனைகளுக்கு முரணாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 8,442,000 தொகை முற்பணமாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	இந்தத் தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	ஆரம்ப ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி 2021 ஏப்ரல் 21 ஆக வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2022 ஒக்டோர் 13 ஆக இனங்காணப்பட்ட துடன் கால நீடிப்பின் பிரகாரம் ஒப்பந்தக் காலம் 2024 சனவரி 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 சனவரி 31 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரை மீண்டும் கால நீடிப்பு வழங்கப்படாதிருந்ததுடன் முற்பணத் தொகையில் ரூபா 20,698,861 ஆன வேலைப்பகுதி நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.	இந்த செயற்திட்டத்தில் மிகை செலுத்துதல்கள், தொடர்பாக பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு அனுப்பியமை போன்ற காரணம் மற்றும் அதனடிப்படையில் ஒப்பந்தகார ரின் நிதி காசுப்பாய்ச்சலில் ஏற்பட்ட தாக்கங்கள் போன்ற காரணத்தின் அடிப்படையில் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்தல் தாமதமடைந்தி ருந்தது. எனினும் இது தொடர்பாக புதிய திருத்தப்பட்ட வேலைத் திட்ட மொன்றின் பிரகாரம் மூன்று மாதங்களுக்குள் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	ஒப்பந்த உடன்படிக்கை, ஒப்பந்த நிபந்தனை (Conditions of Contract) இலக்கம் 14.2(9) இன் பிரகாரம் முற்பணத் தொகை செலுத்தப்பட்டதன் பின்னர் விநியோகிக்கப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழில் இருந்து முற்பணத் தொகை குறைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கொடுப்பனவு சிட்டை இலக்கம் 01, 09, 10, 11, 12 மற்றும் 13 இன் மூலம் முற்பணத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.	இந்த முற்பணத் தொகை முதலாவது பட்டியல் மூலம் அறவிடப்படவில்லை. மேலும் முன்னைய கணக்காய்வு ஐய வினாவைப் பூர்த்தி செய்தல் மற்றும் இடம்பெற்ற தவறுகளினை சரிசெய்யும் நோக்கத்துடன் பட்டியல் இலக்கம் 09, 10, 11, 12, 13, 14 பட்டியல் மூலம் நிதியினை அறவிட்டு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iv)	2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ஒப்பந்த காலம் நீடிக்கப்படாதிருந்தமையால் மாநகர சபை மற்றும் CCD ஒப்பந்தகாரருடன் தற்போது சட்டரீதியான உடன்படிக்கை காணப்படாதிருந்த மையால் வழங்கப்பட்டுள்ள முற்பண காப்புறுதியை பணமாக மாற்றி அறவிட வேண்டிய மிகுதி முற்பணத் தொகையை ஈடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	75 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 90 சதவீதம் அடையப்படாதிருந்த மையால் இந்த சந்தர்ப்பம் வரையில் 15 ஆவது பட்டியலைப் பரீட்சித்ததன் அடிப்படையில் முற்பண பிணைமுறியை பணமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	ஒப்பந்த உடன்படிக்கைக் காலம் 2024 சனவரி 31 ஆந் திகதியில் முடிவடைந்த போதும் 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் ஒப்பந்த வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனை (Conditions of Contract) இலக்கம் 8.7 இன் பிரகாரம் தாமதக் கட்டணமாக (Liquidated Damages) ரூபா 23,212,258 ஒப்பந்தகா ரருக்கு செலுத்த வேண்டிய பட்டியலில் குறைக்க வேண்டியிருந்த போதிலும் அந்த பெறுமதியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேலதிக செலுத்துதல்கள் யாவும் அறவிடப்பட்டதுடன் புதிய திருத்தப்பட்ட வேலைத் திட்டத்தில் விரைவாக வேலையினைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	**உடற்பயிற்சி நிலையக் கட்டிடம்**		
(i)	கட்டிடத்தின் கண்ணாடிகளில் வெடிப்பினால் கட்டிடத்தில் வெளிச்சம் உட்புகுந்ததன் காரணமாக உடற்பயிற்சி உபகரணங்களுக்கு இழப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மழை காலங்களில் அந்தக் கண்ணாடிகளில் மூலம் நீர் கட்டிடத்தில் கசிந்தமையின் காரணமாக கட்டிடத்தில் நீர் சேர்ந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	இந்த நிர்மாணங்கள் மேற் கொண்ட ஒப்பந்தகாரரின் நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்படாதிருந்ததுடன் கண்ணாடியின் மூலம் கட்டிடத்தில் நீர் கசிந்தமை மற்றும் வெடித்திருந்த சுவர்களை மீண்டும் சரி செய்யுமாறு அந்த ஒப்பந்த காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	குறைபாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	உடற்பயிற்சி நிலையக் கட்டிடத்தின் சிலப் கொங்கிறீட் தட்டின் மூலம் ஏற்படுகின்ற நீர் கசிவை சரிசெய்வதற்காக ரூபா 1,032,594 செலவில் 28 தூண்கள் அளவில் சிலப்பொன்றின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டதுடன் கூரையினை நிர்மாணிப்பதற்கு முடியாமையினால் எதிர்பார்க்கப்பட்ட நீர்க் கசிவை தடுப்பதற்கு முடியாதிருந்தது.	இந்தக் கட்டிடத்தின் ஆரம்ப திட்டத்தில் 04 மாடிகளாக இருந்ததுடன் இதுவரையில் 02 மாடிகள் நிர்மாணிக்கப்பட்டமையினால் மேல் உள்ள சிலப் ஒன்றில் மழை காலங்களில் நீர் சேர்கின்றமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் அதனைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய பிரகாரம் அல்லது சரியான பிரகாரம் திட்டம் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்		சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 07 வருமானப் பரிசோதகர்கள் இருக்க வேண்டியிருந்த போதிலும் 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் நீண்டகாலமாக அந்தப் பதவிக்கு உரிய உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படாமல் அலுவலக உதவியாளர், சாரதி, தொழிலாளர்கள், பாதுகாப்பாளர்கள் மற்றும் நாளாந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 10 பேரின் மூலம் வேலை மேவுகை செய்யப்பட்டிருந்தது.	காணப்படுகின்ற வருமானப் பரிசோதகர் வெற்றிடங்களை நிரப்புமாறு பிரதான செயலாளருக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து முறையான கடமைகள் கையளிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	இடமாற்றலாகிச் சென்ற, மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடமி ருந்து அறவிட வேண்டிய ரூபா 750,942 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். கடனைத் தீர்க்குமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவைக் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 3,903,951 பெறுமதியான 55 கடன் மீதிகள் ஊழியர் கடன் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	ஊழியர் கடன் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	ஊழியர் கடன் பதிவேட்டில் உள்ளடக்கி நாளதுவரையாக பேணிச் செல்லல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்
4.1 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்விற்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு மாநகர சபையினால் குறித்துரைத்த காலத்தில் பதிலளிக்கப் படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களில் ரூபா 32,338,170 பெறுமதியுடைய விடயங்கள் தொடர்பாக ஐயவினா மேற்கொள்ளப்பட்டிருந்தது.	பதில் தயாரிக்கப்படுகின்றது. இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	குறித்துரைத்த காலத்தில் கணக்காய்வு ஐயாவினாக்களுக்காக பதிலளிக்கப்படல் வேண்டும்.